விளைதிறன் கொண்ட அதிபரின் பண்புகள்

(க.ஞானரெத்தினம், சிரேஷ்ட விரிவுரையாளர், கல்விப்பீடம், திறந்த பல்கலைக்கழகம்.)

அறிமுகம்:

பாடசாலை முறைமை பாரியதும் பரந்ததும் சிக்கலானதும் ஆகும். ஆறு வயது தொடங்கி இருபது வயது வரையான மாணவர்கள்பாடசாலைகளில் கற்றல் செயற்பாட்டில் ஈடுபட்டிருப்பதே இதற்கான முக்கிய காரணமாகும். ஒரு பாடசாலை என்ற நிறுவனம் தன் நிறுவனம் சார்ந்த குறிக்கோள்களை அடைந்துகொள்ள இயலும் பட்சத்தில் மட்டுமே அப்பாடசாலையானது பயனுறுதி அல்லது விளைதிறன் (Effectiveness) கொண்ட நிறுவனமாக விளங்கும். மேலும் தேசிய கல்விசார் குறிக்கோள்களை அடைந்துகொள்ளும் பொருட்டுத் தம் நிறுவன மட்டத்தில் இனங்காணப்பட்ட விசேடமான குறிக்கோள்கள் பாடசாலைகளிடையே வேறுபடலாம். அவ்வாறான எதிர்பார்க்கப்படும் குறிக்கோள்களை அடைவதற்கு ஒரு பாடசாலை தன்னகத்தே கொண்டுள்ள வரையறுக்கப்பட்ட வளங்களால் உச்ச பயனைப் பெறல் வினைத்திறன் (Efficiency) பண்பாகும்.

இத்தகைய இரு பண்புகளையும் உயர்ந்த மட்டத்தில் ஏற்படுத்துவது அப்பாடசாலையின் அதிபரின் பாரிய பொறுப்பாகும். ஒரு பாடசாலையின் முன்னேற்றம் அல்லது பின்னடைவு அப்பாடசாலையைத் தலைமை வகிக்கும் அதிபரது முகாமைத்துவ மற்றும் நிருவாகத் திறமை அல்லது திறமையீனம் மீதே தங்கியுள்ளது. அதிபர் பாத்திரத்தை பலகோணங்களில் பகுப்பாய்வு செய்யலாம். அவை அதிபரின் ஆளுமை, செயல்திறன், சாதனை, கல்வித்தகைமை, முன்மாதிரி, தொடர்பாடல் திறன் என்று பலவகைப்படும். அதிபர் என்பவர் அறிவாளியாகவும், நுண்ணறிவு கொண்டவராகவும், சமநிலை ஆளுமை கொண்டவராகவும் இருத்தல் வேண்டும். அத்துடன் கல்விக்கோட்பாடுகள் மற்றும் அவற்றின் அமுலாக்கம் தொடர்பான விளக்கம் பெற்றவராகவும் இருத்தல் வேண்டும். மேலும் சமகால கல்வித் தேவைகளை அறிந்து கொண்டவராகவும், நவீன தொழினுட்ப செயற்பாடுகளை பாடசாலையிலும் வகுப்பறையிலும் உள்வாங்கி வழிகாட்டுபவராகவும் இருத்தல் அவசியமானதாகும். பாடசாலைச் சமூகம் ‘‘எல்லாவகையிலும் பொருத்தமானவர்’’ என ஏற்றுக்கொள்ளும் வண்ணம் உயர்ந்த பண்புகளையும், சிறந்த முன்மாதிரியையும் கொண்டவராகவும் இருப்பது கட்டாயமானதாகும். இத்தகைய உயர்ந்த எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றிக் கொள்ள வேண்டிய சிறந்த அதிபரின் பண்புகளை எடுத்து ஆராய்வதே இவ் ஆக்கத்தின் நோக்கமாகும்.

விளைதிறன் கொண்ட அதிபரின் ஒன்பது பண்புகள்:

Atlantic சர்வதேச பல்கலைக்கழகத்தில் Abdikadir Issa Farab என்பவரால் 2013 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட ஆய்வில் விளைதிறன் கொண்ட அதிபரின் ஒன்பது பண்புகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

அவையாவன :

P	–	Planning	திட்டமிடல்
R	–	Respecting	மதிப்பளித்தல
I	–	Indicating	சுட்டிக்காட்டுதல்
N	–	Networking	தொடர்புகளைப் பேணுதல்
C	–	Consulting	ஆலோசனை மேற்கொள்ளல்
I	–	Instructing	அறிவுறுத்தல்
P	–	Participating	பங்கேற்றல்
A	–	Attracting	கவர்ந்திழுத்தல்
L	–	Leading	தலைமை தாங்குதல்

(i) **Planning – திட்டமிடல்**

"திட்டமிடல் தவறும் ஒருவர்
பிழைவிடத் திட்டமிடுகின்றார்"

எந்தவொரு செயற்பாட்டின் வெற்றிக்கும் திட்டமிடல் அவசியமானதாகும். எதை, எப்போது, யாரால், எப்படி, எங்கு செய்யவேண்டும் என்பதனை முன்கூட்டியே தீர்மானிப்பதே திட்டமிடலாகும். ஒவ்வொரு பாடசாலைக்கும் தூரநோக்கு, பணிக்கூற்று என்பன இருக்கும். இதனை அடிப்படையாகக் கொண்டு தேசிய கல்வி இலக்கு, நோக்கம் என்பவற்றிற்கு அமைவாக அதிபரின் திட்டமிடல் அமைதல் வேண்டும். எதனையும் முறையாகத் திட்டமிட்டுக் கொள்வதன் மூலம் காலவிரயம், வளவிரயம், பணவிரயம் என்பன தவிர்க்கப்பட்டு நிறுவனத்தின் குறிக்கோளை இலகுவாக அடைந்துகொள்ளமுடியும். பாடசாலை என்ற சிக்கல் நிறைந்த நிறுவனத்தின் முதல் நிலை முகாமையாளராக அதிபரே கருதப்படுகின்றார். பாடசாலையின் வெற்றி அதிபரின் திட்டமிடல் நுட்பத்திலே பெரிதும் தங்கியுள்ளது. பிரதி அதிபர், பகுதித்தலைவர், ஆசிரியர், பாடசாலைச் சமூகம், நலன்விரும்பிகள் ஆகியோரின் ஆலோசனைகளைப் பெற்று ஒவ்வொரு விடயத்தையும் பொருத்தமான முறையில் திட்டமிட்டுக் கொள்வது அதிபரின் முக்கிய கடமையாகும். எந்தவொரு விடயத்தையும் திட்டமிடும்போது SWOT பகுப்பாய்வை அடிப்படையாகக் கொள்வதும் அவசியமாகும். இங்கு

S	-	Strength	வலிமை
W	-	Week	நலிவு
O	-	Opportunity	வாய்ப்பு
T	-	Threaten	அச்சுறுத்தல்

கல்வி அமைச்சின் சுற்று நிருபங்களுக்கு அமைவாக மூன்று வகையான திட்டமிடல்கள் பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

❖ நீண்ட காலத்திட்டம் (Long term plan)

இது 10 வருடம் அல்லது அதற்கு மேலான காலப்பகுதிகளுக்கான திட்டமாகும்.

❖ இடைக்காலத்திட்டம் (Medium Plan)

இது 3 – 5 வருட காலப்பகுதிகளுக்கான திட்டமாகும்.

❖ வருடாந்த அமுலாக்கத்திட்டம் (AIP)

(Annual Implementation Plane)

இது குறித்த வருடத்திற்கான அமுலாக்கல் திட்டமாகும்.

பொதுவாக எந்தவொரு பாடசாலையிலும் திட்டமிடப்படவேண்டிய பரப்புக்களாகப் பின்வருவனவற்றை கல்வி அமைச்சு முன்வைத்துள்ளது.

- அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டம்
- மாணவர் அடைவு
- இணைப்பாடவிதான செயற்பாடுகள்.
- ஆசிரியர் அபிவிருத்தி
- நலன்புரிச் செயற்பாடுகள்
- கிடைக்கக்கூடிய மனிதவளம்
- கிடைக்கக்கூடிய பௌதீக வளம்
- பாடசாலை முகாமைத்துவம்
- பாடசாலை சமூகத் தொடர்புகள்

இத்தகைய அனைத்து திட்டங்களிலும் விசேட தேவைகளையுடைய மாணவர்களையும் உள்வாங்கிக் கொள்வது முக்கியமானதாகும். மனித உரிமைகள், எல்லோருக்கும் கல்வி போன்ற கல்விச் செல்நெறிகளுக்கு ஆக்கம் அளிப்பதற்கு இது அவசியமானதாகும்.

(ii) Respecting – மதிப்பளித்தல்

பாடசாலையில் கவின் நிலையை உயர்ந்த மட்டத்தில் பேணுவதற்கு ஒருவர் மற்றவரை மதிப்பளித்தல் சிறந்த நடைமுறையாகும். ஆபிரகாம் மாஸ்கோவின் தேவைக்கொள்கையை அதிபர்கள் கருத்திற்கொள்ள வேண்டும். இவற்றுள் கணிப்புத்தேவை அனைவருக்கும் வேண்டிய ஓர் உயிரியல் தேவையாகும்.

பாடசாலையின் அதிபர் தன்னுடன் கடமையாற்றும் ஆசிரியர்கள், உத்தியோகத்தர், மாணவர், பாடசாலைச் சமூகம் ஆகியோரை உயர்வாக மதிக்கவேண்டும். இதனூடாக அனைவரையும் பாடசாலையின் பங்காளிகளாக மாற்றியமைக்கமுடியும். அதிபர், ஆசிரியர், மாணவரிடையே சிநேகபூர்வ உறவு இருப்பது பாடசாலை வளர்ச்சிக்கு அத்தியாவசியமானதாகும். பொதுவாக அநேக பாடசாலைகளில் அதிபர்கள் ஆசிரியர்களை மதிப்பதில்லை என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது. ஒவ்வொரு ஆசிரியர்களும் ஏதோ ஒரு வகையில் பாடசாலையின் வளர்ச்சிக்குப் பங்காற்றக்கூடியவர்கள் என்ற உடன்பாடான எண்ணம் அதிபருக்கு இருக்கவேண்டும்.

பாடசாலைக்கு வேண்டியவர், வேண்டப்படாதவர் என்று எவரும் இல்லை. அனைவரையும் உயர்வாக மதிப்பளிப்பதினூடாக தமது பணியை மிக இலகுவாக அதிபர் செய்து கொள்ள முடியும். வார்த்தைகளை மிகவும் கவனமாகப் பாவிப்பது சிறந்த ஓர் அதிபரின் பண்பாகும். ஆசிரியர், மாணவர்களை புண்படுத்தக்கூடிய வார்தைகளை பாடசாலையில் பயன்படுத்துவதை அதிபர்கள் தவிர்த்துக் கொள்வது சிறந்ததாகும். வார்த்தைகள் உறவு முறைகளில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியவை. ஓர் ஆசிரியரின் மனமுறிவு வகுப்பறையில் தாக்கத்தை உண்டுபண்ணவல்லது என்பதனையும் அதிபர் புரிந்து கொள்ளவேண்டும்.

மனிதனின் உயர்ந்த பண்புகளை பாடசாலைச் சமூகத்திற்கு போதிப்பதில் ஒரு சிறந்த "முன்மாதிரி" (Model) ஆக அதிபரின் வகிபாகம் அமைவது அவசியமானதாகும். Jan Richard (2007) என்பவர் அதிபரின் உடன்பாடான நடத்தைகளாக (Positive behaviors) பின்வருவனவற்றை முன்வைத்துள்ளார்.

- ஆசிரியர்களின் கற்பித்தல் பயிற்சி, தொழில்வாண்மை விருத்தி என்பனவற்றிற்கு ஊக்கமளித்தல்.
- பாடசாலையின் அனைத்து உறுப்பினர்களையும் பாடசாலைக் குடும்பமாக ஏற்றுக்கொள்ளல்.
- ஆசிரியர்களை வாண்மை உடையவராக ஏற்றலும் மதிப்பளித்தலும்.
- அனைவரையும் நம்பிக்கை, நியாயம் உடையவராக ஏற்றுக்கொள்ளல்.
- "திறந்த கொள்கை" (Open door police) கொண்டவராக இருத்தல்.

ஆசிரியர்களின் வாண்மை விருத்திக்கும் தகைமை விருத்திக்கும் அதிபர் வழிகாட்டியாகவும் வாய்ப்பளிப்பராகவும் இருத்தல் காலத்தின் தேவையாகும். தமது பாடசாலையைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவர் இத்தகைய தகைமைகளை விருத்தி செய்யும் போது அதன் மூலம் பாடசாலைக்கு விருத்தியும் தகைமையும் பெருமையும் கிடைக்கின்றது. இவ்வாறான செயற்பாட்டின் மூலம் மாணவர்களும் பாடசாலைச் சமூகமும் நன்மை பெறுவதற்கும் வாய்ப்பு கிடைக்கின்றது.

(iii) Indication – சுட்டிக்காட்டுதல்

திட்டமிடப்பட்ட விடயங்களை அல்லது எதிர்பார்க்கின்ற செயற்பாடுகளை பாடசாலைச் சமூகத்திற்கு நாகரீகமான முறையில் சுட்டிக்காட்டுதல் அதிபரின் மற்றொரு கடமையாகும். எந்தவொரு விடயத்திலும் நேரடியாகக் கட்டளை இடுவதனைத் தவிர்த்துக் கொள்வது சிறந்தது. பொருத்தமான அணுகுமுறையினால் அளப்பெரிய காரியங்களையும் சாதித்து விடலாம். "நீங்கள் செய்ய வேண்டும்" என்பதனை விடுத்து "நாம் செய்வோம்" எனக் கூறுவது பொருத்தமானதாகும். பாடசாலை என்பது ஒரு "சாதனைக் களம்" ஆகும். பன்முக ஆற்றல்கள் கொண்ட அதிக எண்ணிக்கையான மாணவர்களும் ஆசிரியர்களும் பாடசாலையில் இருப்பதே இதற்கான காரணமாகும்.

கல்வி பணிப்பாளராலோ அல்லது வேறு எந்த நிறுவனத் தலைவரினாலோ சாதிக்க முடியாத விடயங்கள் எதனையும் ஒரு அதிபரால் இலகுவாகச் சாதித்துக் கொள்ளமுடியும். பொருத்தமான அணுகுமுறைகளையும் உபாயங்களையும் அதிபர் மேற்கொள்ளும் போதே இது சாத்தியமாகும். பாடசாலையில் எத்தகைய சாதனை அல்லது வெற்றி கிடைக்கப்பெற்றாலும் முதல் பெருமைக்குரியவர் அதிபர்தான். தன்னுடைய பாடசாலையை தான் கடமையாற்றும் காலத்தில் உயர்ந்த நிலைக்கு கொண்டுவர வேண்டும் எனும் எண்ணமும் அதற்கான அர்ப்பணிப்பும் சிறந்த ஒரு அதிபருக்கு இருக்கவேண்டும்.

"ஆயிரம் வார்த்தைகளைப் பேசுவதை விட
ஒரு சிறந்த செயற்பாட்டைச் செய்வது மேலானது"

(iii) **Networking** - **தொடர்புகளைப் பேணுதல்**

சிறந்த ஒரு அதிபரின் தொடர்பு விசாலமானது. பாடசாலை சமூகத்துடன் அடிக்கடி தொடர்புகளை பேணுதல் பாடசாலையின் வளர்ச்சிக்கு அவசியமானதாகும். கல்வி அமைச்சு, கல்வி அலுவலகம், வலயக்கல்வி அலுவலகம், பாடசாலைச் சமூகம் என்பனவற்றுடன் அதிபர் தொடர்புகளைக் கொண்டவராக இருத்தல் வேண்டும். பாடசாலைகளில் நடைபெறும் விழாக்கள், வைபவங்கள் செயற்பாடுகள் அனைத்திலும் பாடசாலை சமூகத்தைத் தொடர்புபடுத்துவது அந்த செயற்பாட்டை உயர்ந்த மட்டத்திற்கு கொண்டுவர உதவும். பாடசாலை அயற் சமூகத்துடன் அதிபர் கொண்டுள்ள தொடர்பு பாடசாலைக்கும் உடைமைகளுக்கும் பாதுகாப்பை ஏற்படுத்தவல்லது.

ஓர் அதிபர் தன்னைப் பற்றிய உயர்வான அபிப்பிராயத்தை மேல் அதிகாரிகளிடம் ஏற்படுத்திக் கொள்வதற்கு கல்வி அலுவலகங்களில் இருந்து வரும் கோவைகள், சுற்று நிருபங்கள், படிவங்கள் என்பனவற்றை உடனடியாக நடைமுறைப்படுத்து முக்கியமானதாகும்.

பாடசாலைகளில் கிடைக்கப்பெறுகின்ற மிகப் பெரிய மனிதவளம் பெற்றோர்களாகும். இவர்களுடன் அடிக்கடி தொடர்புகளைப் பேணுவதன் மூலம் பல அரிய செயற்பாடுகளைப் பாடசாலையில் மேற்கொள்ளமுடியும். அத்துடன் அவர்களும் பங்காளிகளாக மாறிவிடுவர். பெற்றோர்களுடன் தொடர்புகளைப் பேணுவதற்காக ஒரு "நியமமான திட்டம்" அதிபரிடம் இருத்தல் அவசியமானதாகும். பெற்றோர்களுடன் தொடர்புகளைப் பேணும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் மாணவர் தொடர்பான வரவு, கற்றற்பேறு, ஒழுக்கம் போன்ற விபரங்களை அடிப்படையாக வைத்து ஆலோசனை வழங்குதல் சிறந்ததாகும்.

(iv)Consulting – ஆலோசனை மேற்கொள்ளல்

"அனுபவமே மிகப்பெரிய ஆசான்"

எமது நாட்டில் எழுத்துப் பரீட்சையையும் நேர்முகப் பரீட்சையையும் அடிப்படையாகக் கொண்டே அதிபர் தெரிவு நடைபெறுகின்றது. இத்தெரிவின் போது கடந்த கால சாதனை, செயல்திறன் ,மொழியாற்றல் ,குடும்பப் பின்னணி போன்றவை அவதானிக்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் மிகவும் அரிதாகவே காணப்படுகின்றன். மேலும் ஓர் ஆசிரியர் கடந்த காலங்களில் பாடசாலையில் எவ்வாறுதான் நடந்திருந்தாலும் அதிபர் பரீட்சையில் சித்தியடைந்துவிட்டால் அவருக்கு அதிபர் பதவி வழங்கப்பட்டும்விடுகின்றது. இவ்வாறான வேளைகளில் அவ் அதிபர் அனுபவம், தூரசிந்தனை, ஆளுமை இல்லாதவராகவே கடமை ஏற்கவேண்டிய நிலை காணப்படுகின்றது. அதிகமான பாடசாலைகள் சாதிக்க முடியாமல் இருப்பதற்கும் இதுவே காரணமுமாகும்.

பாடசாலையில் நடைபெறும் எந்த செயற்பாடாக இருந்தாலும் துறை சார்ந்தவர்களின் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வது அவசியமாகும். அத்துடன் பாடசாலைச் சூழல், பாடசாலைப் பாரம்பரியம் என்பனவற்றைப் பற்றியும் மிகவும் தெளிவான விளக்கத்தை அதிபர் கொண்டிருப்பது சிறந்தது.

ஒரு பாடசாலைக்கு புதிய ஒரு அதிபர் நியமிக்கப்படும் சந்தர்ப்பங்களில் அவ் அதிபர் அப்பாடசாலையைப் பற்றி பூரணத்துவமான விளக்கத்தை பெறுவதற்கு நீண்டகாலம் எடுக்கலாம். ஆயினும் இப்பாடசாலைகளில் கடமையாற்றிய முன்னைய அதிபர்கள் , பாடசாலைச் சமூகம் ஆகியோருடன் தொடர்பைப் பேணும்போது மிகவும் விரைவாக பாடசாலையைப் பற்றிய தெளிவான விளக்கத்தைப் பெற்றுக்கொள்ளமுடிகின்றது.

அதேவேளை ஒரு அதிபர் எல்லா துறைகளிலும் பாண்டித்துவம் பெற்றிருக்க வாய்ப்பில்லை. இச்சந்தர்ப்பங்களில் துறைசார்ந்த ஆசிரியர்களின் ஆலோசனைகளைப் பெறுவது அவசியமாகும்.

(v) Instructing – அறிவுறுத்தல்

தான் அறிந்து கொண்ட, விளக்கம் பெற்ற விடயங்களை ஆசிரியர்களுக்கு அறிவுறுத்தலும், புதிய விடயங்களை ஏற்றுக்கொள்ளுதலையும் இது குறிக்கின்றது. இது நவீன உலகம். அனைத்துச் செயற்பாடுகளும் விரைவாக மாறிக்கொண்டே வருகின்றன. சமகாலத்தின் தேவைக்கேற்ப அதிபரும் மாறிக்கொள்ள வேண்டியது காலத்தின் தேவையாகும். அதிபரின் முற்போக்கு சிந்தனை, தீர்க்கதரிசனம் எல்லாம் பாடசாலையில் தாக்கத்தை ஏற்படுத்தவல்லன. இதனால் அதிபர் புதிய விடயங்களைத் தேடி அறிந்து அவற்றை பாடசாலையில் நடைமுறைப்படுத்துவது தொடர்பாக யோசிக்கவேண்டும்.. காலை ஒன்றுகூடலிலோ அல்லது ஆசிரியர் கூட்டத்திலோ அதிபர் பல நவீன விடயங்களைப் பற்றி அறிவுறுத்தும்போது, அதிபர் தொடர்பான உயர்வான அபிப்பிராயம், ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் ஏற்படவாய்ப்புள்ளது. எங்கள் அதிபர் ''எல்லாம் தெரிந்தவர்'' என்ற எண்ணம் பாடசாலை சமூகத்திற்கு உருவாகுமாறு அதிபரின் நடவடிக்கைகள் இருத்தல் அவசியமாகும்.

அதிபர் தொடர்பான சமூகத்தின் ‘‘புலக்காட்சி’’ பாடசாலையின் பெருமையில் செல்வாக்கு செலுத்தக்கூடியது என்பதனை பலஆய்வுகள் எடுத்துக்காட்டுகின்றன.

“அறிவுறுத்தும் தலைவர்” எனும் வகிபாகத்தை ஏற்க வேண்டிய அதிபரின் பொறுப்புக்களை Fred C. Luenbury (2010) என்பவர் கீழ்வருமாறு காட்டியுள்ளார்.

- கற்றலுக்கு முக்கியத்துவம் அளித்தல்.
- குழு வேலைக்கு ஊக்குவித்தல்.
- பரீட்சை முடிவுகளை பகுப்பாய்வு செய்தல்.
- ஒத்துழைப்பு வழங்குதல்.
- கலைத்திட்டம், கணிப்பீடு என்பவற்றை ஒருங்கமைத்தல்.

(vi) **Participating – பங்கேற்றல்**

பாடசாலையிலும், வெளியிலும் நடைபெறும் அனைத்து விடயங்களிலும் தவறாது பங்குகொள்ள வேண்டியது அதிபரின் மற்றொரு கடமையாகும். பாடசாலையில் நடைபெறும் விழாக்கள், சம்பவங்கள் எதுவாக இருந்தாலும் அதிபரின் பிரசன்னம் முக்கியமானதாகும். இது ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் ஊக்குவிப்பை வழங்கக்கூடியது. அதுபோல் கல்வி அமைச்சு, கல்வி அலுவலகம் என்பனவற்றில் நடைபெறும் கூட்டங்கள், கருத்தரங்குகள் என்பனவற்றிலும் அதிபர் தவறாது பங்கேற்க வேண்டும். கூடியவரை பிரதிநிதிகளை அனுப்புவதனைத் தவிர்த்துக்கொள்வது சிறந்தது. அதிபர் தொடர்பான சாதகமான அபிப்பிராயங்களை ஏற்படுத்துவதற்கு இது முக்கியமானதாகும். தன்னுடன் கடமையாற்றும் ஆசிரியர்களின் வீட்டில் நடைபெறும் வைபவங்களிலும் அதிபர் கலந்து கொள்வது சிறந்த பண்பாகும். இதனூடாக அதிபர் - ஆசிரியர் தொடர்பு மிகவும் வலுவானதாக அமையும்.

மேலும் பாடசாலை அமைந்துள்ள சமூகத்தின் செயற்பாடுகளிலும் அதிபரின் பங்கேற்பு பயன்பாடுடையது. ஒரு பாடசாலையின் அதிபர் அச்சமூகத்தால் மிகவும் உயர்வாக மதிக்கப்படும் ஒருவராக காணப்படுவார். இவ்வாறான நிலையில் அதிபரின் பங்கேற்பு சமூகத்திற்கு மகிழ்ச்சியையும் விசுவாசத்தையும் ஏற்படுத்தக்கூடியது.

(vii) Attracting – கவர்ந்திழுத்தல்

அதிபரின் செயற்பாடுகளினால் பாடசாலை மீதும் கற்றலின் மீதும் மாணவர்களும் சமூகமும் கவரப்படுதல் வேண்டும். பாடசாலையின் வெளிச்சூழல், வகுப்பறை, வாசிகசாலை, ஆய்வுகூடம், அதிபர் காரியாலயம் என்பனவெல்லாம் புதுப்பொலிவுடனும் கவர்ச்சியாகவும் அதேவேளை தூய்மையாகவும் இருத்தல் வேண்டும்.

அதிபரின் ஆளுமை, நடத்தை என்பன ஆசிரியர்களையும் மாணவர்கள், பெற்றோர், கல்வி நிர்வாகிகள் அனைவரையும் கவர்ந்திருக்குமாறு இருத்தல் முக்கியமானதாகும். அதிபரின் நடத்தை, மனவெளிப்பாடு ஆசிரியர்களின் பாடசாலை வரவில் செல்வாக்குச் செலுத்தும். அத்துடன் மாணவர்களை பாடசாலைக்கு தவறாது வரவழைப்பதோடு ஆர்வத்துடன் கற்றலின் பால் ஈடுபடவும் செய்யும்.

சிறந்த கற்றல் சூழலை பாடசாலையில் ஏற்படுத்துவதற்கு கவனத்தில் கொள்ளப்படவேண்டிய ஆறு விடயங்களை Sand bery (1994) என்பவர் முன்வைத்துள்ளார்.

- பாடவிதானத்தை மாணவரிடையே அமுலாக்க ஆசிரியர்களை ஊக்குவித்தல்.
- கற்றல் நடைபெறுகின்றதென்பதை உறுதி செய்யும் கண்காணிப்பு.
- கற்கவேண்டியவை யாவையெனக் காட்டி நிற்கும் பாட ஏற்பாடு.
- கற்கும் செயற்பாட்டை அர்த்தமுள்ளதாக்கும் கற்போர்கள்.
- வெளிவாரி தகவல் அடிப்படையிலான செயற்பாடு.
- கற்கும் உபகரணங்களின் பயன்பாடு.

(viii) Leading – தலைமை தாங்குதல்

பாடசாலையின் முதல் நிலை முகாமையாளர், தலைவர், பாதுகாவலர் அனைத்துமே அதிபர்தான். அனைத்துச் செயற்பாடுகளையும் தலைமை தாங்கி வழிநடத்துபவரும் அவரே. பாடசாலை தொடர்பாக அனைத்துச் செயற்பாடுகளுக்கும் வகை சொல்லவேண்டிய பொறுப்பும், பாடசாலை உடைமைகள், ஆசிரியர் மாணவர் ஆகியோரின் பாதுகாவலராகத் தொழிற்பட வேண்டிய பொறுப்பும் அதிபரையே சாரும். அதுமட்டுமல்ல அனைத்து தரப்புகளையும் “ஊக்குவித்து” சாதனை மட்டத்தை அதிகரிப்பதற்கு வழிகாட்டவேண்டிய கடமைப்பாடும் அதிபருக்கு உண்டு. ஆசிரியர்களின் தகைமைகள் அதிகரிக்கப்படும்போது அது பாடசாலைக்கு பெருமை என்பதனை அதிபர்கள் கருத்திற் கொள்ளவேண்டும். இதற்கேற்ப தலைவர் என்ற ரீதியில் அதிபர்களும் தமது தகைமைகளையும் அதிகரிக்கவேண்டும். அதிபர் என்பவர்

- அதிகூடிய தகைமை கொண்டவர்.
- சிறந்த ஆளுமை கொண்டவர்.
- தொடர்பாடல் தேர்ச்சி கொண்டவர்.
- முன்மாதிரி கொண்டவர்.
- மனிதநேயம் கொண்டவர்.
- நிர்வாகத்திறமை மிக்கவர்.
- அர்ப்பணிப்புள்ளவர்

ஆகிய பெருமைக்குரியவராக இருந்தால் அப்பாடசாலை விளைதிறன் கொண்ட பாடசாலையாக இருக்கும்.

முடிவுரை:

அதிபரின் வகிபாகம் பரந்தது. தான் பொறுப்பேற்ற பாடசாலையை முதல் நிலைக்கு கொண்டுவர வேண்டிய துடிப்பும் அர்ப்பணிப்பும் அதிபருக்கு இருக்கவேண்டும். தான் கடமை வகித்த காலம் எவ்வளவு என்பதனை விட எத்தகைய பெருமைக்குரிய விடயங்கள் பாடசாலையில் செய்யப்பட்டன என்பதே மிகமுக்கியமானதாகும். தனது பாடசாலைக் காலம் பொற்காலமாக கருதப்படக்கூடியதாக அனைத்து செயற்பாடுகளையும் அதிபர் செவ்வனே செய்தல் வேண்டும். இலங்கையில் சுமார் பத்தாயிரம் பாடசாலைகள் உள்ளன. அப்படியாயின் சுமார் பத்தாயிரம் அதிபர்களும் இருப்பார்கள். அனைவரும் அதிபர் ஆசனத்தில் இருந்து அன்றாடக் கடமைகளைச் செய்கின்றார்கள் என்பது உண்மைதான். ஆனால் இவர்களுள் எத்தனைபேர் தான் பாடசாலையைப் பொறுப்பேற்ற நிலையை விட உயர்ந்த மட்டத்திற்கு அப்பாடசாலையைக் கொண்டு வந்துள்ளனர்? எத்தனை அதிபர்களை சமூகம் பேசிக்கொண்டிருக்கின்றது? பாடசாலையை விட்டு நீங்கிய பின்னரும் எத்தனை அதிபர்களை சமூகம் பேசிக்கொண்டிருக்கின்றது? இவைகளே முக்கியமான வினாக்களாகும்.

“பாடசாலையைப் பார்க்க வேண்டுமா? அதிபரைப் பார்த்தாலே போதும்” என்ற வாதங்களும் உண்டு. இதன் காரணமாக அதிபரின் கல்வித்தகைமை, நுண்ணறிவு, ஆளுமை, மனவெழுச்சிச் சமநிலை, செயல்திறன், மொழி விருத்தி போன்றவை உயர்ந்த மட்டத்தில் இருக்க வேண்டியது அவசியமானதாகும். அதிபரின் செயற்பாடுகள் அர்ப்பணிப்புகள் அதிகரிக்கப்படும் போது அப்பாடசாலையின் சாதனை மட்டமும் அதிகரிக்கும். ஒரு நல்ல அதிபர் உள்ள பாடசாலையில் நல்ல ஆசிரியர்களும் நல்ல மாணவர்களும் இருப்பார்கள். விளைதிறன் கொண்ட அதிபர் கடமையாற்றும் பாடசாலையின் குறிகாட்டிகளாக பின்வருவன கருதப்படலாம்

- சாதனை மட்டம் அதிகரிப்பு
- ஆசிரிய வரவு அதிகரிப்பு
- மாணவர் வரவு அதிகரிப்பு
- பாடசாலையில் சிறந்த கவின்நிலை காணப்படல்
- பாடசாலையில் பல ஆசிரிய குழுக்கள் காணப்படாமை
- ஆசிரியர் , மாணவர்களிடையே உயர் விழுமியம் பேணப்படல்
- ஆசிரியர்,மாணவர் கடமைகளை தாமாகவே பொறுப்பேற்க முன்வருதல்

இத்தகைய பண்புகளைக் கொண்ட அதிபரே வெற்றிகரமான அதிபர் ஆவார். இவர் அதிபருக்காகவே பிறந்த பெருமைக்குரியவருமாவார்.

-